292

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

Venkatachalam
S. 1941-43.

Editor & Publish... A. Lourduswami, B.A., L.T.
R... ...aining School, Trichinopoly.

JL
நை11/ௐ1 ௐ4
ௐ4. 37.12.
210017

... ஜுன் 1947 மலர் 12

...முறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 37] 15 ஜூன் 1947 [மலர் 12

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை, **1947** :—சென்ற மார்ச்சு மாதம் நடைபெற்ற ஷை பரீட்சையில் ஸெக்கண்டரி கிரேடு (Secondary Grade) மாணவர்களில் 76% தேர்ச்சிபெற்றுள்ளார்கள். எலிமெண்டரி கிரேடு (Elementary Grade) மாணவர்களில் 96% தேர்ச்சிபெற்றுள்ளார்கள். விவரம் மற்றோரிடத்திற் காண்க.

இவ்வாறு நம் மாணவர்கள் மிகத் திறமையுடன் தேர்ச்சிபெற்றும், நம் போதனாமுறைப் பாடசாலையின் திறமை ஓங்கும்படியாக உழைத்து வெற்றிபெற்றிருப்பதைக்குறித்தும், எமது மனமார்ந்த ஆசியையும் மகிழ்ச்சியையும் அன்னவரனைவர்க்கும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஷை பரீட்சையில் முதன்மை மார்க்கு பெற்றுள்ள ஸெக்கண்டரி கிரேடு R. S. Padmanabhan (53%) அவர்களுக்கும், எலிமெண்டரி கிரேடு A. Mudiappan (62%) அவர்களுக்கும், நம் பாடசாலைத்தினக் கொண்டாட்டத்தன்று வழக்கம்போல் பதக்கப்பரிசு அளிக்கப்படும்.

குறிப்பு :—ஷை பரீட்சையில் தவறிப்போனவர்கள் பெயர், தவறிப் போன பாடங்கள் முதலிய விவரங்கள் இன்று தேதிவரை Gazette-ல் வெளிவராததால் அடுத்த மாத "பூங்கொத்தில்" பிரசுரிக்கப்படும்.

இனிமேலாக Emergency Secondary Grade ஒரு வருஷ செக்கண்டரி கிரேட் ஆகிற மாணவர் பயிற்சி கிடையாது. முன்போல் Secondary Grade மாணவர்களுக்கு இரண்டு வருஷம் பயிற்சி அளிக்கப்படும். இவ்வருஷம் ஆகஸ்டு மாதம் முதல் தேதிதான் செக்கண்டரி கிரேட் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி துவக்கப்படும்.

தேவை :—போதனாமுறை பயின்ற ஒரு செக்கண்டரி கிரேடு உபாத்தியாயரும் ஒரு ஹையர் கிரேடு உபாத்தியாயினியும் தேவை. விபரங்களுக்கு உடனே கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

The Manager,
Uthariammal Aided Ely. School,
Palayam,
Kurumbalur P.O., Perambalur Tq.

சென்னை கல்வி இலாகா

Copy of Proceedings of the Director of Public Instruction, Madras

[Dis. No. 1834/47 dated 21st April 1947.]

GOVERNMENT OF MADRAS
EDUCATION AND PUBLIC HEALTH DEPARTMENT

ABSTRACT

S. S. L. C. Scheme Admission of Members of the Teaching Profession other than Higher Elementary Grade Teachers as private candidates for the S. S. L. C. Public examination—approved.

[G. O. No. M. S. 344 Edn., dated 19-2-46.]

Read the following from the Director of Public Instruction R. C. No. 6456 E/46 dated 26-11-46 and post copy of the Telephonic Message dated 4-3-47.

[G. O. No. M. S. 685, Education dated 9th April 1947.]

ORDER :—The Government approve the proposal of the S. S. L. C. Board to permit members of the teaching profession other than higher elementary grade trained teachers such as Pandits, Munshis, Weaving Instructors, and others who are in service for at least 3 years as whole time teachers in recognised schools under the control of the Director of Public Instruction also to appear as private candidates for the S. S. L. C. Public Examination.

The following notification will be published in the Fort St. George Gazette.

NOTIFICATION

In the revised scheme for the award Secondary School Leaving Certificate published at pages 410-412 of Part I-B of the Fort St. George Gazette dated the 28th August 1929, as subsequently amended, the following shall be added as a sub-paragraph under paragraph IX namely :—

Other members of the teaching profession such as Pandits and Munshis, Weaving Instructors, Instructors in other Crafts, Physical Instructors and Commercial Instructors who are in service as whole time teachers in recognised schools under the control of the Director of Public Instruction, Madras, for at least three years and who possess the

qualifications prescribed in rule 13 of the Madras Educational rules may be permitted to appear as "private" candidates for the S. S. L. C. Public Examination dispensing with the production of school attendance and records subject to the conditions laid down in paragraph VIII (2) and (3) of the notification.

The concession will be available only for the Examinations to be held during the period from March 1948 to March 1950.

(By order of His Excellency the Governor)

210017

T. S. L. C. Examination, 1947

PASS LIST

Secondary Grade

Serial No.	Reg. No.	NAME	Percentage of marks
1	10879	M. Savarimuthu	43
2	10880	K. S. Devasenapathi	45
3	10881	P. Maria Arulappan	49
4	10882	V. Subramanian	46
5	10883	K. S. Michaelsamy	47
6	10884	G. Arulappan	42
7	10885	S. Arulappan	41
8	10886	T. N. Ramanathan	41
9	10888	M. Maria Louis Selvaraj	49
10	10889	M. Venkataraman	48
11	10890	S. Muthu Veeru	46
12	10892	T. S. Raju	46
13	10893	A. Isaac	43
14	10894	G. Savarimuthu	49
15	10895	S. Selvaraj	47
16	10896	R. Mariasoosai	43
17	10897	D. Dasan	48
18	10898	R. Ramalingam	41
19	10899	David Masillamany	49
20	10900	A. Kanniyan	43
21	10901	K. A. Alangaram	47
22	10902	M. Ekambaram	49
23	10904	P. Kuppusamy	38
24	10905	V. Gnanavelu	48
25	10907	T. Antony	38
26	10908	R. Ramalingam	44
27	10910	R. S. Padmanabhan	53
28	10915	S. Govindarajan	43
29	10917	H. Jayaraman	45
30	10920	Thiagarajan	36
31	10923	R. Balasubramanian	40
32	10924	S. Mookan	45

Elementary Grade

Serial No.	Reg. No.	NAME	Percentage of marks
1	3618	S. George Wesley	45
2	3619	S. Valavaraj	49
3	3621	P. Ramagoundan	48
4	3622	R. Arputham	45
5	3624	S. Pitchaimuthu	50
6	3625	S. Periasamy	43
7	3627	S. Ignaci	49
8	3628	P. Diviaraj	46
9	3629	P. Rayappan	48
10	3630	R. Francis	47
11	3631	R. Rajan	42
12	3632	A. Natesan	47
13	3633	R. Devasagayam	51
14	3634	A. Mudiappan	62
15	3635	P. Francis Maria Selvam	53
16	3636	P. A. Anthonysamy	48
17	3637	N. Subramanian	45
18	3638	S. Pancras	46
19	3639	N. Rajamanickam	52
20	3640	L. Selvarajan	43
21	3641	K. D. Soosai Arulappan	49
22	3642	A. Sengole	52
23	3643	S. Singarayar	49
24	3644	L. N. Sundaram	44
25	3645	M. Veeramuthu	52
26	3646	A. Mariaraj	50
27	3647	P. Soosaimuthu	45
28	3648	Sundara Ganesan	41
29	3649	Amaladasan	48
30	3650	P. Periapillai	41
31	3651	A. Karuppaiah	47
32	3652	A. Palanimalai	44
33	3653	S. Raju	43
34	3654	V. Regis Alias Manickam	45
35	3655	A. Xavier Ponniah	47
36	3656	M. P. Karuppanan	39
37	3658	M. Soosaimanickam	43
38	3659	P. S. Savarimuthu	55
39	3660	A. Ayyakannu	48
40	3661	K. Ganapathy	54
41	3662	V. Narayanasamy	43
42	3663	R. Muthusamy	47
43	3664	V. Pitchaipillai	44
44	3665	K. R. Anthonysamy	42
45	3666	M. Namasivayam	39
46	3667	V. Vedam	57
47	3668	A. Rethinam	56
48	3669	P. S. Jayaraj	43
49	3670	M. Subramanian	41
50	3672	N. Kaliaperumal	47
51	3673	V. Sebastian	45
52	3674	K. V. Ayyasamy	52
53	3675	S. Rayappan	45
54	3676	V. Arumugam	44
55	3677	P. Arulanandam	46
56	3678	I. Muthusamy	37
57	3679	M. Pitchaimuthu	39
58	3680	S. Maria Thangian	44
59	3681	R. Marimuthu	41
60	3682	M. V. Arokiam	47
61	3683	D. Sivapragasam	51
62	3684	P. Mookan	47
63	3685	K. A. Pitchaipillai	40
64	3686	R. Krishnasamy	42
65	3687	S. Lourdusamy	36
66	3689	Syed Abdul Sathar	50
67	3690	A. Yacob	42
68	3691	S. Balaguru	47
69	3692	Y. Soloman	44
70	3693	R. Venketaraman	44
71	3694	V. Periathambi	38
72	3695	B. Abdul Razak	37
73	3696	L. S. Ramachandaran	42
74	3697	R. Sambasivam	37
75	3698	B. Chinnasamy	32
76	3699	Y. Savarimuthu	34
77	3700	B. Soosaimanickam	34
78	3701	E. Thathan	34
79	4079	L. Selvaraj	40

The details about the failed candidates will be announced in the next issue of the Poongothu.

பாடக்குறிப்பு

[A. M. Subramanian.]

வகுப்பு : III. பாடம் : பூகோளம்.

நோக்கம் : காஷ்மீர் தேசச் சிறுவனைப்பற்றி கற்றுக்கொடுத்தல்.

உபகரணம் : இந்தியாதேசப் படம் அல்லது க்ளோப் (Globe).

பீடிகை : பிள்ளைகளே! உங்களுக்குக் கதை கேட்கப் பிரியம் உண்டு அல்லவா! ஆகையால் இப்போது காஷ்மீர நாட்டில் எப்படி ஒரு சிறுவன் தன் வேலைகளைக் கவனமாக நடத்திவருகிறான் என்று சொல்லுகிறேன். கேளுங்கள்!

புது அறிவு : இந்தியாவின் வடக்கில் இமயமலை அடிவாரத்தில் காஷ்மீரம் என்னும் சுதேச ராஜ்யம் ஒன்று இருக்கிறது. இதன் தலைநகரான ஸ்ரீநகர் என்னுமிடத்தில் **கோவிந்தசிங்** என்னும் பையன் வசிக்கிறான். காஷ்மீரம் நமது நாட்டிலுள்ள ஒரு அழகிய பிரதேசம். ஆகையால் கோவிந்தசிங்கும், அவனது குடும்பத்தினரும் உல்லாசமாக காலத்தைக் கழிக்கின்றனர். காஷ்மீரத்தில் சிந்துநதி பாய்கிறது. கோவிந்தசிங்கின் தகப்பனார் வேளாண்மைத் தொழிலை செய்துவருகிறார். இவருக்கு சில ஆடுமாடுகள் உண்டு. கோவிந்தசிங் தகப்பனாருக்கு உதவியாக மலைப் பள்ளத்தாக்குகளில் அந்த ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு வருவான். இங்கு உஷ்ணம் வருஷம் முழுவதும் மிதமாய் இருப்பதால், கோவிந்தசிங்கின் தகப்பனார், கோதுமை பயிர்செய்கின்றார். கோவிந்தசிங் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவன்.

கோவிந்தசிங்கின் தகப்பனார் ஆடுமாடுகள் வளர்க்கிறார் என்று கூறினோமல்லவா? அவர் இந்த ஆடுமாடுகளின் ரோமத்தை இரத்தினக் கம்பளம் நெய்வார். உலகத்திலேயே, காஷ்மீரம், இரத்தினக்கம்பளத்திற்குப் பேர்போனது. இங்கு முசுக்கட்டை மரங்கள் அதிகம் வளர்கின்றன. இந்த மரங்களின் இலைகள் பட்டுப்பூச்சிகளுக்கு ஆகாரம். ஆகையால் கோவிந்தசிங்கின் தகப்பனார் பட்டுப்பூச்சி அதிகம் வளர்க்கிறார். இங்கு "பைன்" மரங்கள் அதிகம் உள்ளதால், அந்த மரத்துண்டுகளைக்கொண்டு இங்குள்ள ஜனங்கள் அழகான விளையாட்டு சாமான்கள் செய்கின்றனர். இங்கு உள்ள பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு மரச்சித்திர வேலை, பட்டு எடுத்தல் முதலிய கைவேலைகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள். கோவிந்தசிங்கும் ஓய்வுநேரங்களில் பட்டு எடுத்தும், மரச்சித்திர வேலை செய்தும் வருவான். இங்கு ஆரஞ்சு, திராக்ஷை, ஆப்பிள் முதலிய பழ மரங்கள் அதிகமாக வளர்கின்றன. இங்கிருந்து—பழங்கள், சால்வைகள், மரச்சாமான்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இங்குள்ளவர்கள் கோவிந்தசிங்கைப்போல நல்லவர்களாயும், தைரியசாலிகளாயும் இருக்கிறார்கள்.

முறை: பிள்ளைகளோடு பிள்ளைகளாய் இருந்து, பிள்ளைகளுக்கு உற்சாகத்தை ஊட்டுதல். கதை சொல்லும்போது, கோவிந்தசிங்கைப்பற்றி சிறு கேள்விகள் போட்டு, படத்தில் காஷ்மீரத்தையும், ஸ்ரீநகரையும் காட்டி, அதன் இருப்பிடத்தையும், இயற்கை அமைப்பையும் கற்றுக் கொடுத்தல்.

பயிற்சி: காஷ்மீரம் எங்கு இருக்கிறது? கோவிந்தசிங் தகப்பனின் முக்கியத் தொழில் எது? காஷ்மீரத்தில் நடைபெறும் முக்கியத் தொழில் எது? இந்தப் பிரதேசத்தில் ஜனங்கள் எதை அதிகமாக பயிர்செய்கிறார்கள்? ஏன்?

கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகள் அமைக்க :—

பட்டுப்பூச்சியின் ஆகாரம்——. ஆகையால் இங்குள்ள ஜனங்கள் அதிகமாக——மரங்களை வளர்க்கிறார்கள். ——மரத் துண்டுகளிலிருந்து அழகான விளையாட்டு சாமான்களைச் செய்கிறார்கள். இங்கு ஆடுமாடுகளின் ரோமத்தைக்கொண்டு——நெய்கின்றனர். காஷ்மீரம் ஒரு——ராஜ்யம்.

அன்பின் ஆலயம்

(Louis M. Selva Raj, Teacher, R. C. Training School)

வாசலருகிலுள்ள ஓர் சிற்றறையில் உட்கார்ந்துகொண்டு மறுநாள் சரித்திரப் பரீட்சைக்காக உரக்க சரித்திரம் படித்துக்கொண்டிருந்தேன். "உலகிலேயே மிகவும் அழகான கட்டிடம் தாஜ்மஹால்; இது மொகலாய சக்கரவர்த்தி ஷாஜஹானால் தம் அருமை மனைவி ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது." இதைக் கேட்டுக்கொண்டிருந்த என் மாமா "டேய்மண்டு, தாஜ்மஹால் கட்டடத்தினுள் என்ன இருக்கிறது தெரியுமா?" "புஸ்தகத்திலேதான் போட்டிருக்கிறதே மாமா. அங்கே ஷாஜஹானின் அருமை மனைவி மும்தாஜ் பீகத்தின் உடல் சமாதி அளிக்கப்பட்டிருக்கிறது." "அடமண்டு! அங்கிருப்பது, மும்தாஜ்பீகம் இல்லையடா! அங்கே ஒரு தாதிப்பெண்ணின் உடல் இருக்கிறது." எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. நாம்தான் தப்பிதமாகப் படித்துவிட்டோமோவென்று என் தங்கை வில்லியின் புத்தகத்தையும் எடுத்துப்பார்த்தேன். "இல்லை மாமா, எந்தப் புத்தகத்திலும் நான் வாசித்ததுபோல்தான் இருக்கிறது." "புஸ்தகத்துக்கு என்னடா தெரியும்? நான் உண்மைக் கதையைச் சொல்கிறேன் கேளு" என்று அருகில் வந்து உட்கார்ந்து கதை சொல்ல ஆரம்பித்தார்.

ஷாஜஹான், தம் இறந்த மனைவிக்கு வாக்குக்கொடுத்தபடி, அவள் உடலைச் சமாதி செய்ய ஒரு ஸ்தூபி கட்ட நினைத்தார். ஆனால் அது மற்றதைப் போலில்லாமல் அசாதாரணமாய் அழகிலும் வேலைப்பாடுகளிலும் சிறந்து சரித்திரத்திலேயே நிலைத்த பெயரை அடையவேண்டும் என்பது அவரது எண்ணம். மும்தாஜின்மேல் அவர் வைத்த அன்பு மட்டானதா?

செலவைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. அழகான மாதிரிக் கட்டடம் ஒன்று அமைத்துத்தரும் சிறந்த சிற்பிக்கு ஏராளமான பொன்தானம் செய்யப்படுமென்று தண்டோரா போடப்பட்டது எங்கும். சிற்பத்தின் குவியலென மாதிரிக் கட்டடங்கள் மலைபோல் வந்து குவிந்தன. அவை கள் ஒன்றும் அவர் மனதிற்குப் பிடிக்காமல், நாட்கள் பல செல்ல அவ் வாசையும் அணையத் தொடங்கியது.

ஓர்நாள் மாலை அரசர் உல்லாசவனத்தில் உலாவிக்கொண்டிருக்கும் பொழுது, துணியால் மூடப்பட்டிருந்த ஒரு மாதிரிக் கட்டடத்துடன் ஒருவன் வந்து அரசனிடம் அதைக் காட்டினன். கண்டதும் அளவிலா ஆனந்தங்கொண்டு, அவனிடமே கட்டடம் கட்டும் வேலையை ஒப்படைத்து கஜானு சாவியையும் கொடுத்தார். அக்காதற் கோயிலும் கட்டிமுடிக் கப்பட்டது. கட்டிடம் கட்டியதின் பரிசாக அவனுடைய விருப்பப்பிர காரம், காதற்கோயிலின் காவற்காரன் வேலை கொடுக்கப்பட்டது. மும் தாஜின் உடல் அங்கு சமாதி செய்யப்பட்டு, தாஜ்மஹால் என்ற பெயரு மிடப்பட்டது.

ஓர்நாள் அம்மாளிகையில் ரஹ்மான் எனப்படும் அச்சிற்பி மண்டியிட்டு, "ஹலிமா! அன்று ஏழை உன் சவத்தருகில் செய்த சபதத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன்; காதற் கோவிலைக் கட்டிவிட்டேன்; ஹலிமா! உலகின் அழகான கட்டடம் உன் உடலைக் காக்கிறது" என்று கூறிக் கொண்டிருந்தான். அரசருக்கு இவ்வார்த்தைகளைக் கேட்டதும் தலை சுழன்றது. மும்தாஜுக்காக அவர் கட்டியிருக்க, இந்த ஹலிமா எங் கிருந்து வந்தாள் என்று புரியவில்லை அவருக்கு. ஏதோ சூது நடக்கிறது என்று அவருக்குப்பட்டது. கோபத்தில் உருவிய கத்தியுடன் உள்ளே சென்று உண்மையை உரைக்கும்படி கூறினர். "இக்கட்டடத்தினுள் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட ஒரு அணங்கின் உடல் இருக்கிறது. அவள்தான் ஹலிமா" என்று பதிலுரைத்தான். அரசன் உள்ளம் கோபத் திலும் வருத்தத்திலும் அலைந்தது. அவனைக் கொல்ல நெருங்கியபொழுது, "குர்ரம்! நான் யார் தெரியுமா?" என்ற சொல் அவரைத் திகைக்க வைத்தது. புன்னகையுடன் "நான்தான் உன் அண்ணன் குஸ்ரு" என்ருன். ஷாஜஹானுக்கு உலகமேபுரியவில்லை இறந்துவிட்டதாக நினைத்த அண்ணன் உயிரோடு எவ்விதம் வரமுடியும் என்று யோசிக்கும் பொழுது, குஸ்ரூ தன்னுடைய விருத்தாந்தத்தை எடுத்துரைக்க ஆரம் பித்தான்.

'என்னுடைய இளவரசு பட்டகாலத்தில் என் அன்னையின் அந்தப் புரத்தில் தாதியாக இருந்த ஹலிமாவின் இனிய கானத்தையும் எழிலையுங் கண்டு அவளிடம் காதல்கொண்டேன். முதலில் கண்கள் ஒருதரம் சந் தித்துப் பேசிய பிறகு யார் தடை என்ன செய்ய முடியும்? வாழ்க்கை யிலேயே மனோகரமான காலத்தை நாங்கள் அப்போது நடந்த காதல் நாடகத்தில் அனுபவித்தோம். எங்கள் திருட்டுக்காதல் எனக்குப் பிடிக்க

வில்லை. அவளை மணம்புரிய என் தாயிடம் சமாச்சாரத்தைச் சொன்னேன். நீ ஒரு பிச்சைக்காரியைக் கலியாணம் செய்துகொள்ள நான் எவ்விதத்திலும் சம்மதியேன் என்று உறுதியாகக் கூறிவிட்டாள் என் அன்னை. அதற்காக ஹலிமாவை அழைத்து தூஷித்து துரத்திவிட்டாள். இவ்விஷயம் என் தந்தைக்குத் தெரிந்து "பிச்சைக்காரிகளை மணம் புரிந்துகொண்டால் அரசுக்கு உரிமை கிடையாது, தெரிந்ததா?" என கர்ஜித்தார். நானும் பயப்படாமல் 'அப்படியே' என்று தலையசைத்தேன்.

என் தாய் இறந்துவிட்டாள். தந்தை தம் புது மனைவி நூர்ஜஹான் மோகத்தில் ஆழ்ந்துவிட்டார். நூர்ஜஹானின் கண்களில் நான் ஒரு ஆணியாகத் தென்பட்டேன். ஒருநாள் காலை நான் எதிரி சைனியங்களுடன் கலப்பு வைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டேன். இதை என் தந்தையிடம் விண்ணப்பித்தும் ஒன்றும் பலிக்கவில்லை. சிறைவாசமனுபவித்துக்கொண்டிருக்கும் என் கண்முன் ஆருயிர் ஹலிமா தோன்றினாள். பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றி மறைந்தன: ஜெயில் காவலன் வீட்டில் வேலைக்கமர்ந்திருப்பதாகவும், கடவுள் கிருபையிருந்தால் தினமும் தாம் இனி சந்திக்கலாம் எனக் கூறிச் சென்றாள். துக்ககரமான இந்த சிறை வாழ்க்கையிலும் ஹலிமா என்னருகில் இருந்தால் 'அதுவே போதும்' என்று தோன்றியது எனக்கு. ஜெயில்காவலன் வீட்டில் பணிப்பெண் வேலை கிடைத்துவிட்டதால் தினமும் என்னைச் சந்திக்க ஹலிமாவுக்கு அனுமதி கிடைத்தது. "ஹிந்துஸ்தானத்தின் அரசராயிருக்கவேண்டும் நீங்கள் இந்த ஏழையை நினைத்ததினால்தானே இவ்வளவு துன்பங்களும்" என்று கூறிச் செல்லுவாள்.

அந்தோ! பரிதாபம்! எங்கள் இன்பக்கனவுகளுக்கு முரணாக, ஓர் நாள் பேரிடி ஒன்று வந்துசேர்ந்தது. ஹலிமா வெகு கவலையுடன் ஓர்நாள் வந்தாள். அவள் முகம் அழுதழுது வீங்கிப்போனதுபோல் இருந்தது. அவளுடைய அழுகையைக் கவனித்து, காரணத்தை வினவினேன். பதில் ஏதுமில்லை. இரண்டொட்கள் சென்றன. மூன்றாம்நாள் இரு காவலாளிகளுடன் என் ஜெயில் கதவு திறக்கப்பட்டு உள்ளே நுழைந்தாள் என் ஹலிமா. இருவரும் உலகை மறந்து சிறிதுநேரம் ஆனந்தக்கடலில் மூழ்கினோம். "ஹலிமா! என்ன இது! என்னை விடுதலைசெய்துவிட்டார்களா?" என்று கேட்டேன். அவளும் புன்னகையுடன் "அநேகமாய் செய்துவிடுவார்கள்" என்று கூறி, கொண்டுவந்திருந்த ஒரு பலகாரத்தை புசிக்கக் கொடுத்தாள். நானும் ஆவலுடன் புசித்தேன். என் மூளை வேலைசெய்ய ஆரம்பித்தது. அச்சமயம் என் அருமை உயிரோவியம் என் கண்முன்னே சுழன்றாள். "ஹலிமா" என்று அலற என் மனம் தோன்றியது. ஆனால் நான் சுய நினைவிழந்தேன். நான் கண் விழித்தபோது ஒரு சிறு வீட்டிலிருந்தேன். சுய நினைவு அடைந்தபின்னர் ஜன்னலிலிருந்த ஒரு கடிதத்தைப் பிரித்தேன்.

"அன்பரே, நீங்கள் கண்விழிக்கும் சமயத்தில் நான் இவ்வுலகைவிட்டு நீங்கியிருப்பேன், இந்த ஏழையின்மீது அன்புவைத்த தாங்கள் அரசை இழந்து, சிறைவாசம் அடைய நேரிட்டது. இதுதான் போகட்டுமென்றால் உங்கள் உயிருக்கு உலைவைத்தேன் பாபி; நான் போகிறேன்; இந்த துன்ப வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியாக. நீங்கள் ஒரு கணமும் தாமதியாமல் காபூலுக்குப் போய்விடவேண்டும். நம் காதல் வாழ்க்கையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்" என்றிருந்தது. அங்கு வந்த கிழவி, 'நூர்ஜஹான் என்னைக் கொன்றுவிடும்படி உத்தரவிட்டதை ஹலிமா கேள்விப்பட்டு, என்னை அன்று சந்தித்து, மயக்க மருந்தைக் கொடுத்துவிட்டு என்னை அப்புறப்படுத்த ஏற்பாடுசெய்து, என் உடையில் அவள் சிறைக்குள் தங்கிவிட்டதாகவும், இதற்குள் அவளைக் கொன்றிருப்பார்கள்' என்றும் கூறினாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவளைத் தடுக்க மனோவேகமாக ஓடினேன், ஆனால் பயனில்லை; என் உயிரோவியத்தை தூக்கிலிட்டுவிட்டார்கள்; நினைவு தவறினேன்; கண்விழித்தபோது காலைச் சூரியன் எழுந்துவிட்டான். முன்னிரவு நடந்த விஷயங்கள் மனதில் அப்படியே பதிந்திருந்தன. அன்பில் கலந்து, தன் உயிரைக் கொடுத்த ஹலிமாவுக்கு ஒரு அன்பின் ஆலயம் கட்டவேண்டுமென்று உள்ளம் பதறியது. உயிரைவிட இருந்த எண்ணம் மாறியது. ஹலிமாவின் உடலை கஷ்டத்துடன் பெற்று, அதை நான் ஒரு காதற் கோவில் கட்டும்வரையில் பத்திரப்படுத்திவைக்கும்படி ஜெயில் காவலனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். 'எங்கள் பரஸ்பர அன்புமட்டும் உண்மையானதாக இருப்பின், உயிருக்காக ஒளிந்து ஓடும் இந்தப் பிச்சைக்காரன் கட்டாயம் உலகம் வியக்கும் காதற் கோவிலைக் கட்டுவேன்' என்று கூறிவிட்டு வெளியேறினேன். "ஆம், அந்த சபதமும் நிறைவேறிவிட்டது" என்று முடித்தான் ரஹ்மான்.

ஷாஜஹான் மனது மாறிவிட்டது. "ஆம், என் மும்தாஜைவிட ஆயிரமடங்கு உயர்ந்தவள்தான் ஹலிமா. இன்பத்தில் அமிழ்த்தப்பட்டதினால் மும்தாஜ் என்னை நேசித்தாள்; ஹலிமா துன்பத்திற்காகவே உன்னை விரும்பினாள். ஹலிமா ஒரு காதல் தெய்வந்தான். அவளுக்கேற்ற காதற் கோயில்தான் இது" என்று முடித்தார் ஷாஜஹான்.

ரஹ்மான் வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஷாஜஹான் 'ரஹ்மான் உலகத்திற்காகவாவது நான் இதை மும்தாஜுக்காகக் கட்டினேன், என்றிருக்கட்டும்' என்று கேட்டுக்கொண்டார். ரஹ்மான் வெறுப்புடனே, "நான் மண்ணில் மறைந்தவுடன் இந்த சம்பவமும் மறைந்துவிடும்; உன் பெயரே நிலைத்திருக்கும்! எனக்கு அது வேண்டாம்" என்று பதிலளித்தார்.

உண்மைச் சரித்திரத்தை உற்சாகத்துடன் முடித்தார் என் மாமா. மனதில் பலவித எண்ணங்களுடன் நானும் படுக்கப்போய்விட்டேன்.

5. காதலின் கனிவு

மேளவாத்தியங்கள் ஒலித்துக்கொண்டிருந்தன! ஆனந்தமே அங்கு நர்த்தனமாடிக்கொண்டிருந்தது. பாலு கலியாண வேலைகளுக்காக மும முரமாக வேலை செய்துகொண்டிருந்தார். அந்த சமயத்தில் கலகலப்பான அந்த வீட்டில் ஓர் அமைதியும் முணுமுணுப்பும் ஒலித்தது. வீணா ஓடி வந்து பாலுவின கால்களில் விழுந்தாள். இதை எதிர்பாராத பாலு ஸ்தம்பித்துபோய் வீணாவைத்தூக்கி அவள் கண்ணீரைத்துடைத்தார், அவரது கண்களிலிருந்தும் நீர் ததும்பி வழிந்தது. அந்தச் சமயம் இந்த சலசலப்பைக்கேட்ட லைலா அங்கு வந்து தன் தாயைக்கண்டதும் "அம்மா!" என்று அலறிக்கொண்டே அவளைக் கட்டிக்கொண்டாள். பாலு வீணாவை விட்டுவிட்டு வீட்டு வேலைகளை மும்முரமாகச் செய்தார். வீணாவும் கலியாணத்திற்காக மும்முரமாக வேலை செய்தாள். மீனாவைக் கண்டு பாலு வீணா வந்ததைச் சொன்னார். மீனாவும் வீணாவைச் சந்தித்தாள். வீணா மீனாவை அன்புடன் வரவேற்று தன்னை மன்னிக்கும்படியும், இனி எவ்வித கலவரமும் நேராது என்றும் உறுதி கூறினாள். ரகுநாதனும் தன் அண்ணன் திருமணத்திற்கு உற்சாகத்தோடு உழைத்தான்.

அக்கினி சாட்சியாக லைலா பிரேம்குமாரின் மனைவியானாள். எல்லோரும் தம்பதிகளை ஆசீர்வதித்தனர் – சுந்தரின் குடும்பத்தினரைத் தவிர!

* * * * *

அன்புள்ள ரகு,

இந்தக் கடிதம் உங்களுக்கு ஆச்சரியத்தையும், பிரமிப்பையும் உண்டாக்கலாம். கன்னிகையான நான் ஒருவருக்கு கடிதம் எழுதுவது "சரியா? தவறா?" என்று விவாதிக்க நான் வரவில்லை. முதல் தடவை நீங்கள் என் தந்தையிடம் வந்து உங்கள் தாயின் அபாயநிலையைக் கூறின பொழுது உங்களைக் கண்டேன். அன்று ஏனோ என் மனத்தில் உங்களால் ஒரு சலனம் ஏற்பட்டது. உங்களுக்கு உதவ நினைத்தேன். ஆனால் அதற்குள் அபலையான நான் என்ன செய்யமுடியும்? நான் ஒரு டாக்டரின் மகளாக இருக்கலாம்—ஒரு செல்வந்தனின் மகளாக இருக்கலாம். ஆனால் டாக்டரின் இதயத்தைப்போல என் இதயமும் கல்லல்ல! நான் பணக்காரி—நீங்கள் ஏழை. ஏழை என்று உலகம் கூறுகிறது! இந்நிலையில் நான் என் மனத்தை உங்களிடம் பறிகொடுத்தேன் நீங்கள் உத்தமர். உங்கள் மனம் உயரிய குணமுள்ளது. நீதியும், மதியும் நேர்மையும் உங்கள் ஆஸ்தி. இவைகள் நித்தியமுள்ளவைகளல்லவா?

அன்பா! என் மனநிலையை தங்களுக்கு தெரிவித்துவிட்டேன். இத்துடன் 100 ரூ. நோட்டு ஒன்று வைத்துள்ளேன். அதை எடுத்து உங்கள் தாயை காப்பாற்றுங்கள். நீங்கள் இரண்டாந்தரம் வந்து என் தந்தையைக் கூட்டிக்கொண்டு போனபின்பு இதை எழுதுகிறேன்.

எனக்கு உங்கள் இருதயத்தில் இடமளிக்க முடியாவிட்டால் என் அன்ப ளிப்பையாவது ஏற்றுக்கொள்ளுங்கள். பெண்களின் இதயத்தின் ஆழத்தை அளக்கும் கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டால் என்னிதயத்தை திறந்துகாட்ட முடியும் என்று நம்புகிறேன். ஏதோ பைத்தியக்காரத் தனமாக எழுதுகிறேன் என நினைக்கவேண்டாம். மற்றவை உங்கள் பதிலைக்கண்டு. அடிக்கடி இங்கே வரவும். என் அன்பு உரித்தாகுக.

இங்ஙனம்,
அன்பை விரும்பும்,
சாந்தி.

கடிதத்தை வாசித்த ரகுநாதன் ஆனந்தமும், ஆச்சரியமும் அடைந்தான். தான் ஒரு ஆசிரியன். அவள் டாக்டரின் மகள். இந்த நிலையில் என்ன செய்வது? கடிதத்தை பலமுறை வாசித்தான். கடைசியாக எப்படியாவது அன்று மாலை அவளைச் சந்திப்பது என்று தீர்மானித்து அன்று மாலை டாக்டர் ஜெகதீஸன் வீட்டிற்குப்போனான். அவனது வருகையை எதிர்பார்த்திருந்த சாந்தி அவனை அழைத்துக்கொண்டு மெத்தைக்குப்போனாள். அங்கே நெஞ்சில் பயத்துடன் பின்தொடர்ந்தான் ரகுநாதன். மெத்தைக்குச்சென்ற அவனுக்கு உட்கார ஒரு ஆசனம் அளித்தாள். ரகுநாதன் ஆசனத்தில் அமர்ந்தான். சாந்தியே பேச்சை துடங்கினாள்.

"அப்பா! நாளைக்குத்தான் வருவார்கள். தாங்கள் வந்ததற்கு என் நன்றி. தாங்கள் ஒன்றும் தப்பபிப்பிராயப்படக்கூடாது. உங்களை நான் காதலிக்கிறேன்......தாங்கள் என்னை நிராகரிப்பின் பின்பு என் நிலை எப்படியோ? தெரியவில்லை?"

"நீ பேசுவதில் அர்த்தமே இல்லையே! நீ என்னை நேசிக்கலாம். நானும் உன்னை நேசிக்கலாம். ஆனால் உலகம்?"

"உலகத்திற்கென்ன கேடு? உங்களோடு சேர்ந்துவாழ உத்திரவு அளிப்பதற்கும் சரி—தடுப்பதற்கும் சரி உலகிற்கென்ன உரிமையுண்டு? உங்களோடு வாழ்வது நானா? உலகமா?"

"யாராயிருந்தால் என்ன? உன் தந்தையின் விருப்பம் பணக்காரனாக இருக்கவேண்டுமென்றிருந்தால்.........?

"தந்தைக்கு இருக்கலாம். ஆனால்...? கேவலம் பணத்தினாலும், அலங்காரத்தினாலும் ஒரு பெண்ணுள்ளத்தை திருப்தி செய்விக்க முற்படுவது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்?

"அன்பு பெரிது என நீ எண்ணி பணத்தை துச்சமாக கருதலாம். ஆனால் நாளைக்கு உன் குடும்பத்தின் தேவைக்கு வேண்டியது அன்பா? பணமா?......உன் குடும்பபாரத்திற்கு தூணாக விளங்குவது பணம் தானே?"

"இல்லை ரகு, நீங்கள் சொல்வது தவறு. பணத்தினால் குடும்ப பாரத்தை தாங்கி நடத்திவிடலாம். ஆனால் அங்கே அன்பு இல்லாவிட்

டால் மனச்சாந்தி ஏற்படுமோ? மனச்சாந்தியில்லா வாழ்க்கைக்கும் உணர்ச்சியற்ற மரக்கட்டைகளுக்கும் வித்தியாசம் என்ன?"

"சாந்தி"

"ரகு"

"உன் பேச்சு சமர்த்தை அறிந்தேன். நல்லது. நீ என்னை என் காதலிக்கிறாய்? உன் கண்களுக்கு இதுவரை எத்தனையோ வாலிபர்கள் தோற்றமளித்திருப்பார்களே! என்னைமாத்திரம் குறித்து விரும்புவதின் காரணம்?"

"கடவுள் கட்டளை!...உங்கள் பேச்சு அன்று என்னை கவர்ந்தது. ரகு! என் கற்பனை ஏடுகளில் வரையப்பட்ட சித்திரத்தை அழிக்க உங்களுக்குப் பிரியமா?"

"இல்லை சாந்தி. நான் ஏழை. ஏழைகளுக்குக் காதல் சுதந்திரம் உண்டாயினும் தனக்கு மீறிய சக்தியை நோக்குவது சகதியில் ஆடும் நர்த்தனமாகிவிடுமே!"

"உங்கள் பிரியம்."

"நான் வருகிறேன்."

"என்னை நேசிக்கவில்லையா?"

"உன்னை நேசிக்கிறேன். அதற்காக உன் வாழ்க்கையை குலைக்கப் பிரியப்படவில்லை. உன்னை நேசிக்கிறேன். அதற்காக உன்னை உலகில் தலைகுனிந்து நடக்கும்படிவைக்கப் பிரியப்படவில்லை."

"சந்தோஷம். உங்கள் பெருந்தன்மைக்குத் தலைவணங்குகிறேன். ஆனால் அடிக்கடி என்னை வந்து சந்திக்கக்கூடாதா? அப்பா அடிக்கடி கேஸ் விஷயமாக வெளியேபோய்விடுவார். வேலைக்காரிமட்டுந்தானிங்கே இருப்பாள்."

"வருகிறேன். என் அண்ணனுக்குகூட வருகிற வெள்ளிக்கிழமை திருமணம். நீயும் வரமுடியுமானால் வா."

""வா." என்று அழைக்கவில்லையே."

"வா. வா. வா. போதுமா?"

"அப்பா! கூட்டிக்கொண்டு போகமாட்டாரே!"

"அதற்காகத்தான் 'வரமுடியுமானால்' என்று ஒரு வார்த்தையையும் சேர்த்தேன்."

"வர முயற்சிக்கிறேன். அண்ணியின் பெயர்?"

"லைலா, மாமாவின் மகள். பெரிய பணக்காரர்"

"காதலோ?"

"ஆமாம். காதலும் உறவும் கூடிய திருமணம்"

"இன்று இவ்வூரில் தீயாமே? வேலைக்காரி சொன்னாள்."

"நல்ல வேளை ஞாபகப்படுத்தினாய், அது எங்கள் வீடுதான்."

"ஹா!... உங்கள் வீடா?"

" ஆமாம். அதிலிருந்து நாங்கள் ஜாமானை அப்புறப்படுத்தி நாங்களும் சென்ற இரவில் வெளியேறினபிறகு தீவிபத்து நடந்தது."

" காரணம்?"

" தெரியவில்லை. எவனாவது சிகரட் குடித்து அப்படி தோட்டத்துப்பக்கம் போட்டிருப்பான். வந்தது வினை!"

" சரி, சாந்தி நேரமாகிறது வருகிறேன்."

" இந்தாருங்கள் 100 ரூ. ஏதாவது சிலவுக்கு வைத்துக்கொள்ளுங்கள்."

" வேண்டாம்."

" பிடியுங்கள் ரகு."

" இது திருட்டல்லவா?"

" உங்கள் சொத்தை நீங்கள் எடுப்பதா திருட்டு?"

" இது என் சொத்து அல்லவே."

" பிடியுங்கள், எனக்குக் கோபம் வரும்."

இதைச் சொல்லிக்கொண்டே அவள் அவனண்டை விரைந்துவந்தாள். அவனும் அதை வாங்க தன் கையைநீட்டி பணத்துடன் அவள் கரத்தையும்பற்றி முத்தம்செய்தான். அவன் விரும்பினதும்; அவன் விரும்பாததும் அதுதான்! ரகுவின் இதயத்தில் ஆனந்த ஊற்று மடைதிறந்தது! "நேரமாகிறது வருகிறேன்" என்று ரகு கூறிவிட்டு வெளியேறினன். சாந்தியும் அவன் மறையும்தூரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குப்பிறகுதான் திருமணத்திற்கு அழைப்பதற்காக ஒருமுறை டாக்டருடன் அவளையும் பார்த்தான். திருமணம் பிரேம்குமாருக்கு நடந்த அன்று டாக்டர்மட்டும் வந்திருந்தார். ரகுவின் இதயம் இருண்டுவிட்டது. அவனையறியாமல் அவளைப்பற்றி நினைத்துக்கொண்டு மனமுருகினன். "அவள் எங்கே? இவன் எங்கே? என்னே ஆண்டவனின் சோதனை? ரகுவும் மீனுவும் பிரேம்குமாரின் வீட்டில் (அதாவது பாலுவின் வீட்டில்) சந்தோஷத்துடன் இருந்தனர். ஆனால் மழைக்குப் பின் வரட்சி வருகிறதும் சகஜம்தானே?

(தொடரும்)

WANTED:—One Secondary Grade trained teacher for R. C. Boys' School, Anandarayankottai, Dindigul P. O. Salary: Rs. 25 plus dearness allowance.

Apply to:—The Manager,
R. C. School, Anandarayankottai,
Dindigul P. O.

பாரதிதாசன் கவித்திறன்

(சி. கேசவன்)

உள்ளத்தை வெளிப்படையாக, சீர்தளைகளுக்குக் கட்டுப்படாமல் தைரியமாய் சொல்லுவனே கவிஞன். அவன் எதுகைமோனையின் அடிமையல்லன். சொல்லிற்கும் யாப்பிற்கும் இலக்கணத்திற்குங் கூட அடிமையல்லன். அவன் அவற்றின் தலைவன்; கருத்தின் முதல்வன் அவன் ஒரு சிருஷ்டி கர்த்தா!

இக்கருத்தை மேனாட்டாசிரிய ராகிய வால்ட் விட்மன் கூறியுள்ளார். இது கவிஞர்களைப்பற்றிதான் கூறிய கருத்து. இதற்கு எடுத்துக் காட்டாக இலங்குபவர் கவிபாரதிதாசன். பாரதிதாசன் வெறுங்கவிஞர் மட்டுமென்று, புரட்சியுள்ளம் படைத்த ஒரு புத்துலகச்சிற்பி. மூடத் தனத்தை முறியடிக்க, சமுதாய இழிவுகளைச்சாட, அறியாமையை அகற்ற, வீணான சாதிக் கொடுமைகளை விரட்ட, வீழ்ச்சியுற்ற தமிழகத்தை விழிப்புறச் செய்ய, தாழ்ந்து ஒடுங்கிய தமிழரைக் தலை நிமிரச் செய்ய, பாரதிதாசன் பாடல்களைத் தவிர மற்று எதுவும் இல்லை என்று மலை மேலிருந்து கூறலாம். கவிஞர்கள் கற்பனையில் மிதப்பவர்கள், காவிய உலகில் சஞ்சரிப்பவர்கள் என்ற கருத்தை மாற்றிவிட்டார் கவிஞர் சுப்புரத்தினம். பாரதிதாசன் உலவியது இன்பத் தமிழகத்திலோ எழில் மிகும் மங்கையரின் இன்பபுரியிலோ அல்ல; அவர் கண்டது கார்த்திகே யனின் கீர்த்தி விளையாடல்கள் அல்ல. அவர் பாடியது பரந்தாமனின் பக்தி நாமாவளியும் அன்று.

ஏழைத் தொழிலாளரிடையே அவர் உலவினர். உண்ண உணவற்று, ஒதுங்க நிழலற்று, உடுத்த ஆடையற்று ஒடுங்கி நிற்கும் மக்களின் காட்சி தான் அவர் கண்டது. எனவே இவற்றைப் போக்கும் கருத்துகளைத் தான் அவர் பாட முடிந்தது. பாடினர்.

அவர் தம் பாடல்கள் அனைத்தும் புரட்சிக்கருத்துகள் பொதிந்தவை. எடுத்து ஆளும் உவமைகள் ஒவ்வொன்றும் புதியவனவாகவே இருக்கும். எளிய நடையில் கருத்துகள் நிறைந்த மனத்தைக் கவரும் பாடல்கள் பாரதிதாசன் ஒருவரால் தான் பாட முடியும். என்? அவர் பிறவிக் கவிஞர். இதுவரை தன் கருத்தை ஒருவருக்கென்று அஞ்சி அவர் வெளியிடாதிருந்ததில்லை. சீர்திருத்த கருத்துகளை தீவிரமாக கூறினர்; இதோ சில எடுத்துக் காட்டுகள்!

"சிற்றூரும், வரப்பு எடுத்த வயலும், ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும், வகைபடுத்தி நெல்சேர
உழுதுழுது பயன் விளைக்குழநிறை உழைப்புத்
தோள்கள் எல்லாம் எவரின் தோள்கள்?
கல்பிளந்து. மலைபிளந்து, கனிகள் வெட்டிக்
கருவியெல்லாம் செய்து தந்த கை தான் யார்க்கை
பொன்துகளைக், கடல் முத்தை மணிக்குலத்தை,
போய் எடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு?

இத்தன்மையான ஆணித்தரம் போன்ற கேள்விகளை கேட்டவர் பாரதிதாசன் ஒருவர்தான். தமிழரின் பண்டை வீரத்தை நினைவூட்டி விழிப்புறச் செய்வதில் இவரது கவிதைகள் நிகரற்றது எனலாம்.

" மானமொன்றே நல் வாழ்வெனக் கொண்டு
வாழ்ந்த என் மற வேந்தர்
பூனைகள் அல்லர்; அவர் வழி வந்தோர்
புலிநிகர் தமிழ் மாந்தர் "

இவ்வடிகளைக் கேட்டால் விழிப்புறாதவர் யார்? இன்னும்;—" உலகாள உனது தாய் மிக உயிர் வாதை அடைகிறாள்.

உதவாதினி ஒரு தாமதம் உடனே விழி தமிழா! கலையே வளர்! தொழில் மேவிடு! கவிதை புனை தமிழா! கடலே நிகர் படை சேர்! சுடுவிடம் நேர்கருவிகள் சேர்! கொலை வாளினை எடடா! மிக கொடியோர் செயல் அறவே, குகை வாழ் ஒரு புலியே உயர் குணமேவிய தமிழா! இவ்வடிகள் கோழையையும் வீரங்கொண்டு குதிக்கச்செய்வன என்பதை மறுப்போர் யார்? இவரது பாடல்கள் புரட்சி புயலைமட்டும் வீசுவதன்றி சில இடங்களில் இன்பதேனையும் பொழிகின்றன. பண்டைகால தமிழகத்தைக் கவிஞர் ;—

" புனலிடை மூழ்கி பொழிலிடை உலவி
பொன்னார் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி இல்லறம் நாடும்
காதல் மாதர் மகிழ் வுறும் நாடு"
" வானிடை மிதந்திடும் தென்றலிலே-மணி
மாடங்கள் கூடங்கள் மீதினிலே
தேனிடை ஊறிய செம்பவள-இதழ்
சேயிழை யாரொடும் ஆடுவமே"

எனக்காதல் மயமான இன்ப உலகமாக காட்டும் அழகு போற்றத்தக்கது. சுருங்கக்கூறின் கவிஞர் தம் கவிதைகள் துன்பத்தை கூறுங்கால் நம்மை கண்ணீர்விடச்செய்கிறது. இன்பத்தைக் கூறுங்கால் எல்லையற்ற மகிழ்ச்சியில் மிதக்கச் செய்கின்றன. வீரத்தைகூறுங்கால் அலிகளையும் ஆண்மை கொள்ளச்செய்கிறது. பண்டைய மூடக்கொள்கைகளைக் கூறுங்கால் பாமரரையும் பகுத்தறிவாளராக்குகிறது.

பசுமரத்தாணிபோலக் கருத்தனை பாய்ச்சுகின்ற கவிஞரை எதிரிகளும் இன்று போற்றுகின்றார்களென்றால் அவர் தம் கவிதையின் அழகுகளை எடுத்துக்காட்ட வேறு என்னவேண்டும்? பிரெஞ்சு நாட்டிற்கு ஒரு ரூசோ! ஆங்கில நாட்டிற்கு ஒரு ஷேக்ஸ்பியர்! கிரேக்க நாட்டிற்கு ஒரு ஹோமர்! துருக்கி நாட்டிற்கு ஒரு உமார்! வங்க நாட்டிற்கு ஒரு தாகூர்! இன்ப தமிழ் நாட்டிற்கு ஒரு **கவிபாரதிதாசன்.**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

அத்தியாயம் 3

சுவாசேந்திரியங்களும் இரத்தத்தை பரவச்செய்யும் அங்கங்களும்

[V. S. Rajan]

ஒருவன் உணவில்லாமல் பல வாரங்கள் ஜீவிக்கலாம். ஆனால் காற்று இல்லாமல் போனால் சில நிமிஷங்கள்கூட ஜீவிக்கமுடியாது என்பது யாவரும் அறிந்த விஷயமே. இதற்குதாரணமாக நீரில் விழுந்து இறந்து போகிறவர்களையும், சுருக்குப்போட்டு இறந்துபோகிறவர்களையும் கவனித்தால் இறந்துபோவதற்கு காரணம் காற்று இல்லாமையே. அதுபோலவே காற்று இல்லாத இடத்தில் நெருப்பு எரியாது. நெருப்பை எரியச் செய்ய எவ்வளவு காற்று அவசியமாய் இருக்கிறதோ அதேபோல உயிரைக் காப்பாற்றவும் அது அவசியமாய் இருக்கிறது.

காற்றிலே கலந்துள்ள பிராணவாயு நமக்கு கிடைத்து அதின் மூலம் நம் உயிரைக் காப்பாற்ற உட்கொண்ட காற்றை நுரையீரலுக்குள் செல்ல விடுகிறோம். உடனே இரத்தத்தோடு கலந்து உடம்பின் சகல பாகங்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. இப்படிச் செல்வதால் உயிரைக் காப்பாற்றவும், உஷ்ண சக்தியை உண்டாக்கவும் பிரயோஜனப்படுகிறது. உட்சென்ற வாயு வெளிவரும்போது பிராணவாயு குறைந்திருப்பதோடு இரத்தத்தில் கலந்துள்ள விஷபதார்த்தங்களையும் கொண்டுவருகிறது. இதை நாம் கண்ணால் பார்க்கமுடியாது. இந்த அசுத்த காற்று வெளிச் செல்லவும் சுத்த காற்று உள் வரவும் நம் அறைகளில் உள்ள கதவு ஜன்னல் களை திறந்துவைக்கவேண்டும். நோயற்ற உடம்பு நிமிஷம் ஒன்றுக்கு பதினாறு அல்லது பதினெட்டு முறை சுவாசம் உள்வாங்கி வெளிவிடுகிறது. ஒருமுறை சுவாசிப்பதற்குள் இரத்தாசயம் நாலுதடவை அடிக்கிறது. தேகாப்பியாசம் செய்யும்போதும் உடலில் ஜுரம் அடிக்கும்போதும் கூடுதலாக சுவாசிக்கிறோம். இவ்விதமாக சுவாசிக்கிறது நம்மையறியா மலே நடந்துகொண்டேயிருக்கிறது. நாம் தூங்கும்போது மெய்மறந்திருக் கிறோம். நமது சுவாசத்தை நாமே மேற்பார்க்கவேண்டியிருந்தால் தூங்க ஆரம்பித்ததும் இறக்கவேண்டியதாய்வரும். இந்த தொழில்களை நரம் பின் ஒரு பகுதி ஆண்டு வருகிறது. மனிதனைக் காட்டிலும் மிகச் சிறந்த சக்தியொன்று அவனுக்குப்புறம்பே இருந்துகொண்டு உடம்புக்கு உயிரைத் தரும் சுவாசத்தை ஆண்டுகொண்டுவருகிறது. இந்த சக்திதான் கடவுள். இவ்வளவு ஜாக்கிரதையாக நம்மை காத்து வருகிற கடவுளை நாம் தினம் பக்தியோடு தொழுதுகொள்ள நம்மேல் சுமந்த கடமையல்லவா! நாம் உட் காரும்போதும், நிற்கும்போதும் உடலானது நிமிர்ந்திருக்கவேண்டும். அங்ஙனமிருப்பின் நுரையீரல்களுக்குள் அதிக காற்று உட்சென்று பையை விரிவடையச்செய்து உடம்புக்கு நல்ல சௌக்கியத்தைக் கொடுக் கிறது. இதோடு ஆழ்ந்த மூச்சுகளை அடிக்கடி எடுத்துக்கொள்ளவும் செய்தால் நுரையீரல் அதிக சுறுசுறுப்போடு அதிக காற்றை உட்கொள்ளு

கின்றன. இதனால் நிம்மோனியா, க்ஷயரோகம் முதலிய நுரையீரலைப் பற்றிய வியாதிகள் அண்டுவதில்லை.

காற்றை உட்கொள்ள மூக்குத்துவாரம்தான் சரியான வழி. மூக்கின் உள்ளிருக்கும் கணக்கில்லாத சிறு உரோமங்கள் காற்றில் கலந்துள்ள தூசிகளையும் கிருமிகளையும் வடிகட்டி உள்விடுகின்றன. மேலும் உஷ்ணத்தையும் ஈரத்தையும் கொடுத்து உதவுகின்றன. இப்படி மூக்கின் வழி காற்றை வாங்காமல் இருந்தால் மூக்கினுள் சில புற்றுகள் வளர ஆரம்பிக்கின்றன. உள் நாக்கும் வீங்கி நோவடைகிறது. இதோடுகூட மதுபானம் அருந்துவதாலும், புகையிலை உபயோகிப்பதாலும் சுவாசேந்திரியம் கெட்டுப்போகிறது. புகையிலையால், மூக்கு, தொண்டை, குரல்வளை, நுரையீரல் இவைகளில் உள்ள உட்புறத்தோல்கள் சீக்கிரம் கெட்டுப்போகிறது. இதுபோலவே மதுபானம் அருந்துகிறவர்களுக்கும் நுரையீரலைத்தாக்கி நிம்மோனியாவைப்போல் நுரையீரலைச்சார்ந்த நோய்கள் உண்டாகி மனிதனுக்கு ஆபத்தை விளைவிக்கின்றன. ஆதலின் நம் உடம்பை நோயற்ற வாழ்வில் நிலைத்திருக்கவேண்டின் மேற்சொன்னவைகளை கையாளவேண்டும். அவைகளைச் சுருங்ககூறின், நம் அறை சுத்தமான காற்றும் வெளிச்சம் வரக்கூடியதாய் இருக்கவேண்டும். இராக்காலங்களில் கதவுகளைத் திறந்துவைத்தே தூங்கவேண்டும். படுக்கையைச்சுற்றி கொசு வலைபோடுவதால் கொசுவால் உண்டாகும் பலவித தொத்து நோய்களைத்தடுக்கலாம். மூச்சை உட்கொள்ளும்போதெல்லாம் நுரையீரல் நிரம்பும்படியாக அதிக காற்றை எடுத்துக்கொள்ளவேண்டும். புகையிலையையும் மதுபானத்தையும் வெறுக்கவேண்டும். எப்போதும் மூக்கின் வழியே சுவாசிக்கவேண்டும். அடிக்கடி ஆழ்ந்த மூச்சு எடுத்துக்கொள்ளவும், தூங்கும்போது முகத்தில் துப்பட்டிகளைப்போட்டு போர்த்தவும்கூடாது.

(தொடரும்)

"நடு நிசி நகரம் விடுத்த சுவடுகள்"

"விடியணி"

காட்சி முடிந்து கால் நடையாக
வேட்கை மிகுந்த விரைவுடன் கூடல்
நகரின் வழியே நடந்தேன் கண்ட
அகத்தை யுருக்கும் அந்தக் காட்சிகள்
மனத்தில் பன்னரும் அடிச்சுவடுகளை
தினம் தினம் நினைக்க விடுத்தன காண்பீர்.

ஆதவன் தோன்றி மறையுந்தனையும்
காதம் கேட்கும் காது செவிடுபடு
இரைச்சல் இருளில் துஞ்சியதாமோ
இரைச்சல் ஒடுங்கிய ஆழி இதாமோ

கார் வான் தன்னில் ககனம் ஒளி பெற
வேர் பல விட்டிடும் அடி வேர் போன்ற
கண்ணைப் பறிக்கும் ஒளிர் மின்னல் போல்
மண்ணை வாரி இறைத்து மறையும்
எண்ண வண்டிகள் எங்குற்றனகாண்.

விதவிதமான எழில் மிகு பொருட்கள்
நிதம் ஒரு விலை கொள் நிலையிலாப் பொருட்கள்
நிறைந்திடும் கடைகள் ஓர் கல் விழுந்ததும்
மறைந்திடும் காக்கைக்கூட்டம் போல
கதவடைபட்டுக் கண்ணியம் குறைந்திராப்
பதுமமலர் போல் பொலி விழுந்ததுகாண்.

விருந்தென எண்ணும் விண்ணையளாவும்
பெருந்தனம் நிறைந்தோர் பெருமனையெல்லாம்
மாங்கல்ய மிழந்த மங்கை போன்று
ஆங்கு தோன்றும் தோற்றம் காண்மின்

அரக்கர் தம்தலை நிமிர்த்தனு தினமும்
அரசு செலுத்திடும் அந்தக்காட்சி போல்
தோற்றம் அளித்திடும் திருக்கோயில்களும்
மாற்றம் அடைந்து மனத்தை நடுக்கும்
கூற்றம் போன்று குரலையும் ஒடுக்கும்
சீற்றம் நிறைந்து தோன்றின் காண்மின்.

எங்கும் நிறைந்தது மதுரையின் எழில்
பங்கம் அடைந்த ஓர் பாவை போல்
தன் எழில் மறைத்து வெட்கம் நிறைந்து
பன்னரும் பயங்கரத் தோற்றமளிக்கும்
கூடல் என்ற மாட மதுரையோ

“டிங் டாங்” என்று நாதம் எழுப்பும்
எங்கோ உள்ள மணி காண் பொறியும்
கள்ளனைக்கண்டு கனன்றெழுந்து
“வள்வள்” என்று குரைத்திடுங் குக்கலும்
எங்கும் நிலவும் நிச்சப்தத்தை
குளத்தில் வீழ்ந்த ஓர் கல் எழுப்பிய
மளமள வென்று தோன்றி மறையும்
அலைகள் போல அச்சிறு குரலும்
குலை பதைத்திட எழுப்பிடல் அரியின்
கொடுங் குரல் போல கலைத்திடும் கேள்மின்.

மனிதர் வாழ்க்கை மண் மேல் வாழ்க்கை
இனிதென நினைந்திட மாறும் வாழ்க்கை
நறுமணம் நிறை நற்றுழம் பூவில்

கருவோடழித்திடும் கடும் பணியொன்று
இருப்பதையறியார் என்று மறியார்
நிலைகொள் இன்பமோபுகழோ கொண்டு
மலைபோலென்றும் மண்மீதிருக்குமோ
அலைந்திடும் கடலில் பட்டதோர் தக்கை
நிலை குலைத்திடும் புயலில் நாணல்
இலை உதிர்த்திடும் எழில் மரம் போல் மண்
சிலை கீழ் வீழ்ந்தால் நொறுங்கிந்தன்னரும்
எழில் குன்றி இகழப்படுதல் போல்
அழியா வாழ்க்கையென்றகந்தை கொண்டு
இறுமாந்திடும் நம் மானிடர் வாழ்க்கை
நறுக்கிய கிளை நசித்திடுவது போல
மாறி மாறி இன்பமும் துன்பமும்
வாரியில் படகென்பதை யுணர்த்தும்
நோக்கு மின் ஆங்கு நோக்கு மின் ஆங்கு
ஏக்கத்தாலென் இதயம் ஒடிந்தது
கல்லேயணையாய் மண்ணே மனையாய்
எல்லோராலும் இகழப்பட்டு
குளிப்போக்கிடவும் கந்தலுமின்றி
தளிர் போல் வாடித்துஞ்சுகின்றாரே
பாரதத் தாயின் தவப்புதல்வர்கள்
ஆரமுதுண்ணும் அரசனின் சோதரன்
பாகையிலை யென்று துணிப்பரோ சிரசை
வாகையிலை யென்று துணிப்பரோ கழுத்தை
பாகையோர் நாள் பஞ்சாய் நசித்திடும்
வாகையோர் நாள் வாடி வதங்கிடும்
இதனை யொக்கச் செல்லும் செல்வம்
“ அதனிடம் இல்லாவோர் நிறையாலே
வெட்டி யெறிந்தது வீணர்சமூகம்
எட்டுணை யிதுவோர் அறிவுடை செயலோ
சுரண்டிப்பிடுங்கி பணச்சுரங் கொண்டு
வரண்டிச்சேர்க்கும் பணத்தைக் கண்டு
பெருமை கொள்ளு மிச் சிறுமைச்சமூகம்
கருமிகள் நிறைந்த கயவர் சமூகம்
அன்னார் உழைப்பால் ஆதைச் செல்வம்
அன்ன முண்ணாது கூழது அருந்தி
குருதித்துளியாம் வியர்வைத்துளியை
பெரும் நிலத்தினில் வடித்து அவர் என்
பொடித்து உழைத்ததால் வந்த உயிர்
குடித்தபண மென்றறியாரவரே.

மக்கள் நடுவண் ஊழல் புகுதல்
எக்காரணத்தால் என்று கேள்மின்
ஏழைகளைத்தன் சோதரனென்றெண்ணுக்
கோழைகள் தாம் என்பதை நீர் அறிமின்
அடுத்து வசிக்கும் அயலான் தன்னை
கெடுத்தவன் குடியை அழிக்க எண்ணும்
கயவர் கூட்டம் இருக்கும் தனையும்
நயவஞ்சகர்கள் இருக்குந்தனையும்
உண்டோ நிரந்தர சமாதானம்
வண்டல் மண்ணும் வலுத்த கசடும் நிறை
ஆறுதான் இவ்வாழ்க்கை என்பதை
மாறுதல் வேண்டும் மக்காள் அறிமின்
மாறுதல் மாறுதல் என்றலறிடும்
மாறுதலில்லா மனிதர் சமூகம்
எத்தகைத்தான மாறுதல் வேண்டும்
எத்தகைத்தான சீரமைப்பு வேண்டும்
என்றோர் கணமும் ஓர்ந்தனராமோ
இல்லையில்லை என்பதே இந்தத்
தொல்லை நிறை மனிதர்க்குப்பதிலாம்
படைத்து நல்ல ஒழுக்கவேலியை
அடைத்தரவணைத்துக்காத்திடு மந்த
ஆதியுமில்லான் அந்தமுமில்லான்
நீதி செலுத்தும் நிர்மலனவனின்
கமலபதத்தை நம்பிப் படைத்த
தமரென்பதன்றி ஏனையோரையும்
உடன் பிறந்த சோதரனாக
திடமுடன் மனதில் தீர்க்கமாய்க் கொண்டு
நல்லன செய்தல்லன நீக்கி
பொல்லாதவனென்றிகழா தென்றும்
நல்லவனுக்க நாடோறு முழைமின்
சாதிப்பூசல் சமுதாயத்தில்
ஆதியினின்று உடன் வரவில்லை
எதிலராயினும் நண்பராயினும்
வேதியராயினும் ஈனராயினும்
ஓர்தாய் வயிற்றில் உதித்தமைந்தரென்
றோர்ந்து வாழ்மின் என்றும் வாழ்மின்
சாந்தனை மாந்தர் தம்முள் நீங்கா
சாந்தியோடென்றும் சகத்தில் வாழ
சாந்தியே உருவமே தேவனை வேண்டுவாம்
சாந்தி சாந்தி சாந்தி சாந்தி.

சிறு கதை

[V. Rayappan, Vembar]

"உருவம் மாறிய பலன்"

குப்பன் கொஞ்சம் பூமியும், ஒரு வீடும் வாங்கினுன். அவன் வாங்கிய பூமி மிகச் சிறிது. இரண்டு அடிவைத்து நடந்தால் வேலிமீது மோதவேண்டியதாயிருக்கும். வீடும் சிறிது. அவ்வீட்டிற்குள் நுழைய மிகக் குனிந்துபோகவேண்டும்.

இம்மாதிரி நிலையையுடைய குப்பன் திருப்தியற்றவனுயிருந்தான்.

ஒருநாள், ஒரு மந்திரவாதி அவனிடம் சொன்னுன் :—

"உன் வடிவம் சிறிதானுல் உனக்கு நல்லது" என்ருன்.

இதைக் கேட்ட குப்பன் மிக ஆனந்தமடைந்தான். பணம் கொடுத்து மந்திரவாதியிடம் மணி உருண்டைகள் வாங்கியுண்டு, வடிவம் சிறிதாக ஓர் அங்குஷ்டப்பிரமாண ரூபத்தையடைந்துவிட்டான்.

வீடும், நிலமும் பெரிதாக அமைந்தன. அவனுக்கு சௌகரியமாய் விட்டது. வீடும் பிரமாண்டமான இடமாகத் தோன்றியது. ஓர் அறையே பெரிய கோவில் மண்டபம்போலிருந்தது. குப்பன் தன் வீட்டைப் பல சிறு பாகங்களாக்கித் தன்னைப்போன்ற ரூபமுடைய வேறு மனிதர்களுக்கு வாடகைக்கு விட்டு பணம் சம்பாதித்தான். பெரிய வருமானம் அவனுக்குக் கிடைத்தது.

நிலம் பரந்த பூமியாகிவிட்டது. நிலத்தையும் சிறு சிறு பாகமாக வேலியிட்டான். பல பாகங்களைக் குத்தகைக்கு விட்டான். இதிலும் அதிகப் பணம் சம்பாதித்தான். மிகப் பணக்காரனுனன்.

ஒருநாள் ஒரு பெரிய பருந்து அவ்வழி பறந்துவந்தது. இந்த சிறு மனிதனைக் கண்டு, தன் குஞ்சுகளுக்கு விளையாடக் கொடுக்கலாமென நினைத்து, மூக்கால் கொத்தி, தன் கூண்டிற்குக் கொண்டுபோய்விட்டது. மந்திரவாதியின் பேச்சைக் கேட்டு வடிவத்தைச் சிறிதாக்கிக்கொண்ட குப்பன், மனம் வருந்தினுன். ஆனல் வருந்தி பயனென்ன?

மந்திரவாதி வேண்டுமென்றேதான் இதை குப்பனுக்கு இப்படி யுக்தி சொல்லிக்கொடுத்தான்போலும் !

2|6017

விடுகதைகள்

1

பிள்ளை யார்?

தேடித் திரிந்—தோடிப் பிடித்—தேகிப் பறந்—தோடி மறைந்(த) செவ் வாயுடை—சிறப் பறவை.

பல்லொன்றுமில்லை—பகல்வதோ சொல்லை
புகுவதோ சோலை—மிகுவதோ தோலை
பகு அறிவாளோர் பகர்வாரிப்பிள்ளை யாரோ?

(கு. ஆபேல்)

2

யார்? என்ன?

மக்களும் மக்களும் நாங்கள்தான், மகராஜா மக்களும் நாங்கள்தான். அம்மிமேலே கும்மியடிக்கும் அழகுமக்களும் நாங்கள்தான். பட்டுப் புடவைக்கு முத்திரைபோடும் பாக்கியசாலிகளும் நாங்கள்தான்.

3

நட்டமாய் நிற்கிறவனுக்கு நறுக்கு நறுக்கென்று கடிக்கும் வேலை.

(A. M. Balasubramaniam.)

4

நடுக்காட்டில் பொங்கல்வைத்து இறக்கியிருக்கிறது. நாயும் தொடாது; பேயும் தொடாது.

5

காய் கன்த்த காய்; கைபட்டால் கொட்டிப்போகும்.

(R. Arokiasamy.)

Reg. No. M. 1534.

இருச்சொல் அலங்காரம்

[அன்பு சோழ]

	விடை.
1. ஒருமா முக்காணி ஆவதேன்? ஒத்துண்டு உலகில் திரிவதேன்?	காணியற்று.
2. இருமா வீசம் ஆவதேன்? இறைக்கும் எற்றம் நிற்பதேன்?	முக்காணிபோய்.
3. சீதையை இராமன் பிரிந்ததேன்? திரியோதனனுக்குத் தீங்கு வந்ததேன்?	அம்மானை இட்டு.
4. சிறிய ஊர் பட்டினம் ஆவதேன்? வெறியர் மயங்கித் திரிவதேன்?	குடியேறி.
5. கீரை விதைப்பதேன்? கீழோர் செல்வரைச் சுற்றுவதேன்?	பிடுங்கித்தின்ன.
6. ஆட்டுக்கறி கசப்பதேன்? ஆண்டி பட்டினி கிடப்பதேன்?	பிச்சை எடாமல்.
7. காவன்னா கோவன்னா ஆவதேன்? காளை எருதைப் பாய்வதேன்?	கொம்பை இட்டு

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.
Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—I, 13—6—1947.